செய்தி வெளியீடு எண்: 32 நாள்: 31.08.2020

**தேனி மாவட்டம்,**
**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள்**
**திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்ட முதல் போக பாசனத்திற்காக**
**வைகை அணையிலிருந்து தண்ணீரை திறந்து வைத்தார்:-**

*****

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (31.08.2020) மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செல்லூர் கே.ராஜு அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர்.பி.உதயகுமார் அவர்கள் ஆகியோர் முன்னிலையில், தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. டி.ஜி.வினய், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில் திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்ட முதல் போக பாசனத்திற்காக வைகை அணையிலிருந்து தண்ணீரை திறந்து வைத்தார்.

**பாசனத்திற்கான தண்ணீரை திறந்து வைத்து, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

தமிழக அரசு, பெரியாறு பிரதானக் கால்வாய் பாசனப் பகுதியின் கீழ் உள்ள இருபோக பாசன பகுதியில் முதல் போக பாசன நிலங்களுக்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்ற வேளாண் பெருங்குடி மக்களின் கோரிக்கையினை ஏற்று, பெரியாறு பிரதானக் கால்வாய் பாசனப் பகுதியின் கீழ் உள்ள இருபோக பாசன பகுதியில் முதல் போக பாசன பரப்பான 45,041 ஏக்கர் நிலங்களுக்கு வினாடிக்கு 900 கனஅடி வீதம், 45 நாட்களுக்கு முழுமையாகவும், அடுத்த 75 நாட்களுக்கு முறை வைத்தும் ஆக மொத்தம் 120 நாட்களுக்கு இன்று (31.08.2020) முதல் திறந்து விட உத்தரவிட்டுள்ளது.

அதனடிப்படையில், வைகை அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீர் வாயிலாக திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்திற்குட்பட்ட 1,797 ஏக்கர் நிலங்களும், மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டத்திற்குட்பட்ட 16,452 ஏக்கர் நிலங்களும், மதுரை மாவட்டம், வடக்கு வட்டத்திற்குட்பட்ட 26,792 ஏக்கர் நிலங்களும் என மொத்தம் 45,041 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும், கடந்த 13.08.2020 அன்று பெரியாறு அணையிலிருந்து தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு ஆயக்கட்டு பகுதிகளில் முதல் போக சாகுபடிக்கு 14,707 ஏக்கர் நிலங்களுக்கு வினாடிக்கு 200 கன அடியும், தேனி மாவட்ட குடிநீர் தேவைக்கு 100 கன அடியும் ஆக மொத்தம் வினாடிக்கு 300 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. எனவே, விவசாயப் பெருங்குடி மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற்று பயனடைய வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.டி.கே.ஜக்கையன் (கம்பம்), ஆர்.மாணிக்கம் (சோழவந்தான்), பா.நீதிபதி (உசிலம்பட்டி), தேனி மாவட்ட ஊராட்சித்தலைவர் க.பிரிதா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இ.சாய் சரண் தேஜஸ்வி, இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர்கள் க.ரமேஷ் (தேனி), ஆர்.கோவிந்தராசு (திண்டுக்கல்), பெரியகுளம் சார் ஆட்சியர் செல்வி டி.சிநேகா, இ.ஆ.ப.. ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் ஆ.லோகிராஜன், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் எம்.எஸ்.பாண்டியன், மதுரை பாண்டியன் மொத்த கூட்டுறவு விற்பனை பண்டக சாலை தலைவர் ராஜா, பொதுப்பணித்துறை (நீர் வள ஆதார அமைப்பு) பெரியாறு வைகை வடிநிலகோட்ட செயற்பொறியாளர் சுகுமார், உதவி செயற்பொறியாளர் செல்வம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.எம்.சையதுகான், வேளாண்குடி பெருமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**